1979 பிப்ரவரி 22]

கள்—தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் 15 பேர்கள். அந்த 15 பேர்களில் 4 பேர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

சிதம்பரம் துணைக் கருவூலம்.

* வினா எண். 121—திரு. துரை கலியமுர்த்தி : மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சிதம்பரம் துணைக் கருவூலப் பணிகள்ஸ்டேட் பாங்க் மூலம் நடத்தப்படுவதற்கு மாத கமிஷன் தொகை எவ்வளவு கொடுக்கப்படுகிறது?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): கமிஷன் தொகை ஒன்றும் கொடுக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 122-ம், 123-ம் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

சோளிங்கபுரம் தாயார் சன்னதி திருப்பணி.

*வினா எண். 124—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வடாற்காடு மாவட்டம், சோளிங்கபுரம் பழைய தாயார் சன்னதி கோயிலை புதுப்பிக்க அரசு அளித்த மான்யத் தொகை எவ்வளவு?

(ஆ) தனிப்பட்டவர்கள், மடங்கள் அறநிலையத் துறையின் மூலமாக நிதி உதவி செய்துள்ளார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) வடாற்காடு மாவட்டம், சோளிங்கபுரம் பழைய தாயார் சன்னதி கோயிலைப் புதுப்பிக்க அரசு இதுவரை எவ்வித மானியமும் அளிக்கவில்லை.

(ஆ) அறநிலையத் துறை மூலம் நிதியுதவி ஏதும் இதுவரை அளிக்கப்படவில்லை. ஆனால் தனிப்பட்ட ஒருவரிடமிருந்தும் மடாதிபதி ஒருவரிடமிருந்தும் பொதுமக்களிடமிருந்தும் நிதி உதவி பெறப்பட்டுள்ளது.